JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **222/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | ஈஸ்வரமூர்த்தி | Village | ஈரோடு ரோடு, பெருந்துறை |
| Father's Name | துரைசாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 11.08.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கட்டிட தொழில் செய்து வருகிறேன். 17.03.2018 ம் தேதி காலை 10.30 மணி சுமாருக்கு நான் என் சொந்த வேலையாக ஈரோட்டிற்கு செல்வதற்காக பெருந்துறையிலிருந்து காரில் நானும், யுகேந்திரனும், மகேந்திரனும் வெங்கமேடு பகுதியில் பெட்ரோல் பங்க் உள்ளது, அந்த பங்கில் பெட்ரோல் அடித்துக் கொண்டு நாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு செல்ல காத்துக் கொண்டிருந்த போது வயது முதிர்ந்த நபரான காசியண்ண கவுண்டர் TVS 50 ல் பெருந்துறையிலிருந்து ஈரோடு செல்லும் திசையில் சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வந்த தனியார் பேருந்து SBT வேகமாக வந்து காசியண்ண கவுண்டர் மோட்டார் சைக்கிளில் மோதியதில் கீழே விழுந்ததில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு விட்டது. நாங்கள் பார்க்கும் போது காசியண்ண கவுண்டருக்கு பல இடங்களில் அவரது உடலில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது.

2. நானும் என்னுடன் வந்த நபர்களும் காசியண்ண கவுண்டரை பார்த்து காசியண்ண கவுண்டரை பெருந்துறை KMC மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம். பெருந்துறை KMC மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு மேல்சிகிச்சைக்காக ஈரோடு KMCH மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆஜரில் உள்ள எதிரி தான் தனியார் பேருந்தை ஓட்டி வந்து விபத்தை உள்ளாக்கிய நபர் ஆவார். விபத்து நடந்தவுடன் தனியார் பேருந்தின் ஓட்டுநரின் பெயரை விசாரித்து தெரிந்து கொண்டேன் தற்போது அவர் பெயர் என்னவென்று நினைவில் இல்லை.

3. அதன் பின்னர் நான் பெருந்துறை காவல் நிலையத்ஹதற்கு வந்து எழுத்து மூலமான புகாரை கொடுத்து தனியார் பேருந்து ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் நான் கையொப்பமிட்டு கொடுத்துள்ளேன். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரித்து என் வாக்குமூலத்தை பதிவு செய்தார். 17.03.2018 ம் தேதி மாலை 5.00 மணி சுமாருக்கு விபத்தில் காயம் பட்டு சிகிச்சையில் இருந்து வந்த காசியண்ண கவுண்டர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போய் விட்டார். காசியண்ண கவுண்டர் பிரேதத்தின் மீது பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் ஈரோடு அரசு மருத்துவமனையில் விசாரித்த போது நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** எனக்கு விபத்தில் இறந்து போனவர் பெரியப்பா உறவு முறை ஆவார். காசியண்ண கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரு மகன் உள்ளார். காசியண்ண கவுண்டரின் மகனிடம் ஆலோசனை செய்த பின்னிட்டு தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் எந்த இடத்தில் இருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு நான்கு ரோடு என்றால் சரிதான். பெருந்துறையில்

இருந்து சம்பவ ரோட்டுக்கு வரும்போது அது குறுகிய ரோடு என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சம்பவம் நடந்த இடத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் எந்தப் பகுதியில் அடித்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல பின்பகுதியில் அடித்ததாக சொல்லி உள்ளேன்.

2. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்தில் இறந்து போனவர் எனக்கு பெரியப்பா உறவு முறை என்பதால் அவரது உறவினர்களுடன் கலந்து ஆலோசனை செய்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த போது காசியண்ண கவுண்டருக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்த போது காசியண்ண கவுண்டருக்கு கண் பார்வை சரியாக தெரியாது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் சொல்லும் இடத்தில் பேருந்து வேகமாக வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். எழுதப்பட்ட புகாரில் நான் கையெழுத்து மட்டும் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை